## தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2021

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பந்தி இலக்கங்கள் 22 மற்றும் 27(ஆ) இணங்க சுற்று முறையின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கடன்பட்டோர் வித்தியாசம் ரூபா 373,452 தொகை மற்றும் பெற வேண்டிய தொகையின் வித்தியாசங்கள் ரூபா 532,220 தொகை செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் | 2022 ஆண்டு முதல் நியமத்தின் படி சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்படு மூலதன விடயத்தின் வித்தியாசத்தின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், அவை நிதிச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 48 இற்கு இணங்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் ஒன்றிற்கு ஒன்று பிரதியீடு செய்யக்கூடாது எனினும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்காக திறைசேரி உண்டியல் மொத்த கூட்டுப் பெறுமதியாகிய ரூபா 11,409,081 இற்கான பெறுமதியினால், அத் திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் முற்பெறுவனவு ஆகிய ரூபா 9,424 தொகையினை பிரதியீடு செய்து தேறிய பெறுமதியாகிய ரூபா 11,399,657 தொகை நடைமுறைச் சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு முதல் நியமத்தின் படி சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1996 ஒக்தோபர் 24 திகதிய இலக்கம் 946/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 1994 இன் 01 இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன கட்டளைகள் | | | |
| (i) பிரிவு 2(4)(1)(உ) | திரைப்படக்களின் உயர்ந்த தரத்தினை உறுதிப்படுத்துவற்காக மற்றும் திரைப்படக்கள் தயாரிப்பதற்காக மற்றும் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | இதற்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பிரிவு 2(4)(1)(ஊ) | திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு புலமை பரிசில்கள் வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்ததுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | பிரிவு 2(4)(1)(எ) | தரமான கலைசார் திரைப்படக்கள் முழுமையாக தயாரிப்பதற்காக திரைக்கதை வசன மதிப்பீக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த திறைக்கதைகள் அல்லது அவ்வாறான திரைப்படங்களை தயாரிக்கும் கருமங்களுக்காக பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள மூலவலத்தின் மூலம் விசேடத்துவ உபகரணங்கள் குத்தகைக்கு பெறுவதற்காக இயக்குனர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் திரைப்பட தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (iv) | பிரிவு 2(4)(1)(ஏ) | 05 வருடங்கள் அல்லது அதற்கு மிகையான காலம் தொடர்ச்சியாக உள்நாட்டு திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப்படங்களுக்கு படங்களுக்கு குறையாத தொகையொன்றிற்கான அந்த அலுவல்களை பூர்த்தி செய்துள்ள தொழில்சார் தொழில்நுட்பவியலாளருக்கு தமது திறனை அதிகரித்துக்கொள்வதற்காக மற்றும் முன்னேற்றிக் கொள்வதற்காக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலின் கட்டளையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் உட்படுத்தப்பட்ட | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சான்றுபடுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆண்டிற்கான நிதிக் | நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கும் போது மற்றும் அங்கீகாரம் பெறும் போது தாமதம் ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 872(2)(ஈ) | கூற்றுக்கள் 02 மாதங்கள் தாமதித்து 2022 மே 05 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட்டடிருந்தது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,000,099 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,591,563 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 591,464 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்கள் ரூபா 1,001,147 இனால் அதாவது 19 சதவீதத்தினால் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் திரைப்பட தயாரிப்பு மற்றும் திரைப்பட மாளிகைகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 73,155,724 இற்கான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், அத்திகதில் உள்ளவாறு அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக்கடனிற்கான ஒதுக்கத்தின் கூட்டுப் பெறுமதி ரூபா 67,268,372 தொகையாக காணப்பட்டமையால் தேறிய கடன்பட்டோர் ரூபா 5,887,352 தொகையாக இருந்தது. அதன்படி, மொத்தக் கடன்பட்டோர்களில் 92 சதவீதம் அறவீடு செய்ய முடியாத கடன் என இனங் கண்டிருந்ததுடன், துறையின் வீழ்ச்சியை முகாமைத்துவம் செய்து கடனை அறவீடு செய்வதற்கு போதிளவு நடவடிக்கை எடுக்காமை மற்றும் முகாமைத்துவத்தின் பலவீனம் இற்கான காரணமாக இருந்தது. | அவதானிப்பு சரியானது. | இந்தக் கடன்தொகை பல்வேறு நடவடிக்கை முறைகளை கடை பிடித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கு மீளாய்வாண்டு முழுவதும் காசேட்டின் படி காணப்பட்ட அனுகூலமான சராசரி வங்கி மீதி ரூபா 10,418,821 தொகையாகும். ஆக்கபூர்வமான பொருளாதார | 2022 ஆண்டு முதல் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகை பணத்தினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நலன்கள் ஏதும் எதிர்பார்க்காமல் இந்த தொகை 2021 ஆண்டு முழுவதும் நடைமுறைக் கணக்கில் விளைவற்று காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், குறுகிய கால முதலீட்டொன்றில் ஈடுபடுத்தாமல் ஆண்டு பூராகவும் நடைமுறைக் கணக்கில் விளைவற்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. | | |
| (இ) | 1996 ஒக்தோபர் 24 திகதிய இலக்கம் 946/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த 1994 இன் 01 இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் திருத்திய கட்டளைகளுக்கு இணங்க திரைப்படத் துறையை அபிவிருத்தி செய்யும் குறிக்கோள்களுக்காக இந்த நிதியம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2021 ஆண்டின் போது நிருவாக சபைக் கூட்டங்கள் 02 நடைபெற்றிருந்த போதிலும், முதிர்வடையும் முதலீடுகளை மீள முதலீடு செய்தல் மற்றும் கடனை அறவீடு செய்வதற்கு முயற்சி எடுத்தல் தவிர திரைப்படத் துறையின் முன்னேற்றத்திற்காக ஆண்டின் போது செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு ஒன்று நிதியத்தின் மூலம் வழங்குவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுத்திருக்கவில்லை. | 2022 இல் நிருவாக சபைக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தில் திருத்திய கட்டளைகளுக்கு இணங்க துறையின் அபிவிருத்திக்காக செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரைப்படக் கூட்டுத்தானத்தில் இருந்து, திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு பெறவேண்டிய குத்தகை பங்களிப்பு ரூபா 27,168,167 தொகையாக இருந்தது. அத் திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான நடைமுறை சொத்துக்களில் இருந்து 38 சதவீதமான தொகையினை கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவீடு செய்வதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு உறுதிச் சீட்டுக்கள் அனுப்பப்பட்ட போதிலும், நிதி நெருக்கடி காரணமாக பணம் கிடைத்திருக்கவில்லை. | இந்த பெறவேண்டிய குத்தகையை பல்வேறு நடவடிக்கைகளை கடைபிடித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |